உ

முருகன்றுணை

# திருப்பழனி

# அலங்காரபஞ்சகம்.

இஃது

சேலம் ஜில்லா ஹுஜூர்

மேஜிஸ்திரேட் குமாஸ்தாவாகிய

**ம-ா-ா சேலம்-சுந்தரமுதலியாரவர்கள்**

இயற்றியது.

புரசை அஷ்டாவதானம்,

**ம-ா-ா சபாபதிமுதலியாரவர்களாற்**

பார்வையிடப்பட்டு


சென்னபட்டணம்

லோஜிசியன்பிரசில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

குரோதன ஹூ ஐப்பசிமீ

## விளம்பரம்.

இப்புத்தகம் வேண்டியவர்க ளிதன்கிரயம்-ந-அணா வீதம் சேலம் கலெக்ட்டர்கச்சேரி மே. குமாஸ்தா சுந்தரமுதலியா ரவர்களிடத்தில் வாங்கிக்கொள்ளலாம் புறதேயத்திலுள்ளவர்கள் புத்தகக்கிரயமும் தபாற்கூலியும் சேர்த்து தாங்களெழுதும் கடிதத்துக்குள் தபால்முத்திரைகளை வைத்தனுப்பி யழைப்பித்துக்கொள்ளலாம்.

இங்ஙனம்.

செ. கந்தசாமிபிள்ளை.

வேலுமயிலுந்துணை.

## சாற்றுகவிகள்.

---

### புரசை-அஷ்டாவதானம் சபாபதிமுதலியாரவர்க ளியற்றிய

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

ஐந்துமுகனார்க்குமுன்னா ளாறுமுகக்குமரனெனவமர்ந்தாரோனு... ... ந்
தந்தையனையான்சேயனெனுமுனாக்குத் தகவிங்காட்டக்கோர்போற்றி ... ச்
சிந்தனைசெய்தென்பழனியாண்டவர்க்கப் பெரும்பொருண்மைதெளியச்சேலஞ்
சுந்தரமாலலங்காரபஞ்சகமாமணிமாலை சூட்டினான் ... ... ல்

~~~~~~~~~~

சென்னை இராஜதானி வித்தியாசாலைத் தமிழ்ப்புலவர்

### புரசை-பொன்னம்பலமுதலியாரவர்க ளியற்றியது.

கட்டளைக்கலித்துறை.

இரும்புலவோரு மினிதெனக்கொள்ள விகபரத்தி ... ற்
பெரும்புகழ்போக மதாரப்பெற்றானிந்தப் பேருலகி ... ல்
விரும்பும்பழனிக் கலங்காரபஞ்சக மேவலங்க ... ல்
இரும்புங்கரைந்துருகச்சுந்தரமா லியற்றியன் ... றே

~~~~~~~~~~

சென்னை நார்மல்கல்லீஜ் தமிழ்ப்புலவர் திரிசிரபுரம்

### சோடசாவதானம் சுப்பராயசெட்டியாரவர்க ளியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மலங்காரநிறைவயல்சூழ் சேலநகர்வாணனருமணக்கும்பான ... ற்
றலங்காரமலிபுயத்தோன் சுந்தரநாவலன்றொடுத்துச்சூட்டினான் ... ல்
இலங்காரமகில்செறிந்த பழனிமலையெம்பெருமானிணைத்தாண்மீதி ... ல்
அலங்காரபஞ்சகமென்றொருபெயர் பெற்றணியசும்புமலங்கலன் ... றே

~~~~~~~~~~

### பழனி மாம்பழக்கவிச்சிங்க நாவலரியற்றிய

விருத்தம்.

வலங்காரகனையனையமணி நெடுவேலணிபழனிவரதன்பொற்றா ட்
கிலங்காரபுஞ்சமென வலங்காரபஞ்சகமொன்றியற்றினான் ... ல்
சலங்காரதுகுப்பவெழுதடவாளையடர் சேலந்தனில்வாழ்செல்வ ன்
கலங்காரமியன்கமலகாதலசுந் தரனெனுநங்கருணைமா ... லே
~~~~~~~~~~

சேலம்ஜில்லா ஆத்தூரர் தாலூகா சார்வாயிலிருக்கும்,

## கதிர்வேற்கவிராயரியற்றிய

விருத்தம்.

சுத்தபரிபூரணவகண்டிதமெய்ஞ்ஞான பரஞ்சோதியா ... கி
முத்தியருள்வித்தெனவே முளைத்துவளர்தென்பழனிமுருகன்மீதி ற்
சித்திரவிசித்திரமாயலங்கார பஞ்சகத்தைச்செப்பினுன ... ல்
புத்தமுதமெனக்கவிஞர் புகன்றிடச்சுந்தரனென்னும்புலவன்று... னே

~~~~~~~~

இந்நூற்செய்தவரது மாணுக்கராகியசெவ்வாய்ப்பேட்டை

## உபாத்தியாயர் கந்தசாமிபிள்ளையவர்க ளியற்றிய

ஆசிரியவிருத்தம்.

திருமகள்விளங்குவனசத்தடநிறைந்துயர் திருப்பழனிமலையில்வள்ரு ... ஞ்
சிவகுருபராநந்தனுனமெய்க்குமரனிரு செய்யதாண்மலரிலன்பாய் ... ப்
பொருவறுமலங்காரபஞ்சகமெனுந்தமிழ்ப் பூமாலையைத்தரித்து ... ப்
புலவர்கண்மகிழ்ந்திடவரங்கேற்றியச்சினிற் பொலிவுறவிசைத்தனனுல்
மருமலிநறுஞ்சோலைசூழ்தருஞ்சேலநகர் வாசனன்பர்க்குநேச ... ன்
வளமேவுகுவளையந்தாரினன்மேழியின் வண்கொடிபெறுஞ்சீரின ... ன்
பெருமைசெறிலெளகிகவைதிகமார்க்கமும் பிழையறவறிந்தொழுகுவோ ன்
பேசலுறுபுகழ்மருவுசுந்தரனெனப்பெயர் பிறங்குகவிவலவன்மன் னே

~~~~~~~~

செவ்வாய்ப்பேட்டை நா. நீலகண்டசெட்டியார் குமாரரும் ஏ - ா வைக்கீல்
அப்பாசாமிபிள்ளையவர்கள் மாணுக்கரும் இந்நூற்செய்தவரது நேசரும்
இராமாயணபாரதப்ரசங்கியுமாகிய

## இராமலிங்கசெட்டியாரவர்க ளியற்றிய

விருத்தம்.

கார்பெறுதண்பொழிலினெடு கழனிமிலைபழனிமலைக்காங்கேயன்ற ... ன்
சீர்பெறுசேவடிக்கினியசிகழிகையாப் புகலியலார்செஞ்சொற்பாவா ... ற்
பார்பெறுமிவ்வலங்காரபஞ்சகத்தை விஞ்சையர்கள்பணிக்கவேய்ந்தா ன்
தார்பெறுசேலப்பதியிற்சந்ததம்வாழ் சுந்தானுந்தமிழ்வல்லோ ... னே

~~~~~~~~

செவ்வாய்ப்பேட்டை வையாபுரிசெட்டியாரவர்கள் குமாரர்

## குழந்தைசெட்டியாரவர்க ளியற்றிய

விருத்தம்.

சேல்வயல்பொலிந்தபழனியங்கிரிவாழ் சேவலனடிக்கணியா ... க
மால்வளர்தமிழின்மலர்களாற்றொடுத்து வளரலங்காரபஞ்சகத் ... தை
நால்வகைக்கவியோர்புகழ்ந்திடவனைந்தா னறுமலர்ச்சோலைகடென்றி... க்
கால்பொரவலருஞ்சேலமாநகரிற் கவின்பெறுசுந்தரமா ... லே
~~~~~~~~

உ

சரஹணபவாயநம.

ஹர

# திருப்பழனி

# அலங்காரபஞ்சகம்.

## காப்பு.

### விநாயகர்துதி.

நேரிசை வெண்பா.

பூவார்வதுவைப் பொழிற்பழனிவாழ்குமா ... ... ன்
பாவாரலங்கார பஞ்சகத்திற்-காவூரு ... ... ம்
அஞ்சக்கரப்பெருமா னங்கரத்திலேந்துமைங்... ... து
கஞ்சக்கரப்பெருமா காப் ... ... ... பு. (க)

### வாணிதுதி.

எண்ணிப்பணிந்தே னிசையுடனேபாடுகின் ... ... ற
பண்ணுக்குநல்ல பனுவலுக்கு-நண்ணு ... ... ங்
கலசத்தனமனையாக் காணப்பெறுவெ ... ... ண்
சலசத்தனமனையா டா ... ... ... ள் (உ)

### பெரியோர்துதி.

சிந்தித்தேனெங்கள் திருமுருகன்சேவடி ... ... யை
வந்தித்தேவன்பிறவி மாற்றினராய்-முந்தி ... ... ச்
சிவானுபவம்பெற்றோர் திகழ்சரணப்போ ... ... தை
அவாவுடனென்சென்னி யணிங் ... ... ... து (௩)

### அவையடக்கம்.

பூங்காவனக்குயின்முன் புல்லறிவாற்காக்கையும்பி ... ன்
வாங்காமற்கூவு வகுளியொக்குந்-தேங்கியசீ ... ... ர்
வற்றாத்தமிழ்க்கடலை மாந்திக்கவிபொழிய ... ... க்
கற்றோர்முன்யான்சொல் க ... ... ... வி (௪)

# நூல்.

பணைத்ததுதிக்கையிலகும் பாதிரிவேழத்தி ... ன்
றணைச்சரணமென்றுந் து ... ... ... ணே

## நேரிசை வெண்பா.

புகழ்சேர்திருப்பழனிப் பூதரத்தினுரு ... ... ந்
திகழ்வேலெடுத்துவளர் தேவே-தகைமேவி ... ... ப்
பொன்பொலியுநின்றுளைப் போற்றவெனதுள்ளத்தி ... ல்
அன்பொடுஞானந்தந்தரு ... ... ... ள் (க)

## கட்டளைக்கலித்துறை.

அருளேநிறைந்த கடலேவிளங்கு மருமறையு ... ட்
பொருளேயெனது வினைதவிர்த்தாட்கொண்டு பூரணமா ந்
தெருளேபெருகச் சிவஞானபோதச் செழுஞ்சுடர்த ... ந்
திருளேயகற்ற வருவாய்பழனிக் கிறையவ ... ... னே (உ)

## நேரிசை யாசிரியப்பா.

இறைப்போதேனு முறைப்பாடாகி ... ... ன்
பன்னருந்திருத்தப் பொன்னரும்பதத்தி ... ... ற்
சிந்தையைநிறுத்தி வந்தனைசெலுத்த ... ... ற்
கொருப்படும்போதிக் கருப்படும்பூவி ... ... ன்
அல்லல்கண்மூந்தி யொல்லெனவந் ... .. து
மாயம்புரிவதா னேயந்தவ ... ... ... றி
அவ்வழியூடென் செவ்வகமோ ... ... ... டி
அலைவதாளிதனை நிலைபடவியற் ... ... றி
மடந்தனையெய்தாத் திடந்தனையுதவி ... ... த்
தனிக்கழற்சேவை யெனக்களித்தோங்கு ... ... ங்
கதிபெறவருள்வாய் காம ... ... ... ரு
மதிதவழ்பழனி மலைக்காவல ... ... ... னே (ங)

## பன்னிருசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

வலனதுபுரிந்தமரர் தொழுமரனிடங்கொள்பக வதிமடியிருந்துமகிழ்வா... ய்
வண்ணத்தசும்புநிறை கிண்ணப்பறம்பமுத வாரியுண்டருள்வாய ... னே
புலன்மயன்முனிந்தபழ வடியவர்கள்சிந்தைமிசை புதுமையொடுநின்றசுடரோ
புற்புதமெனத்திகழு மிச்சடமெனக்குரிய பொக்கிஷமெனக்கதித்து ... ன்
நலன்மிகவதிந்தபர கதிதனில்விடுங்கழலை நனிபெறநினைந்துருமம ... ல்
நறையுலவுகுழலியளா விழையுமெனதிருளகல நற்போதமெற்கருளுவா ய்
கலனணிசெழுந்திருவின்மனையெனமுதிர்ந்தொழுகுகவிஞர்புகழ்தென்பழனிவா
கானமயில்வீரனே ஞானமயவாரனே கனிபிரணவாகார ... னே (ச) [ழ்

### எண்சீர்க்கழிநெடிற் சந்தவிருத்தம்.

காரார்கிறமலி சூராதியரொளிர் காசாருடல்பட வேபோர்மே ... ல்
நேராயடல்புரி வேலாயுதமணி நீள்பீடுறுவரை வாகோ ... னே
சீரார்கருணையென் மீதேனிலைபுகல் தேவாவருள்செய லாகா ... தோ
ஆராதனைபெறு தாரார்பழனியி லாராவமுதென வாழ்வோ ... னே (ரு)

### வெண்பா.

வாழ்வதனைமெய்யென்று வஞ்சகரோடேயிணங்கி ... த்
தாழ்வதனைபெய்தாத் தகையருள்வாய்-கேழ்பெறுதெ ... ன்
மாணுடையமேருவென வானவர்கள்சூழ்பழனி ... த்
தாணுமிசைமேவு புனி ... ... ... தா (சு)

### கலித்துறை.

புனிதச்சரணருள் தேவர்களிக்கப்புசரசுர ... ... ர்
மனதிற்பெருங்கல் விழவேயொலித்துமகிழ்வொடுத ... ந்
தனனத்தனன வெனநடஞ்செய்யுந்தனிமயிலூர் ... ந்
துனதப்பழனி மலைமேலுலவுமொருமுத ... ... லே (எ)

### நேரிசை யாசிரியப்பா.

முதலிவ்வுலகை யுதவிப்பல்லுயி ... ... ர்
தமைத்தந்தினிதா யமைத்துப்புரந் ... ... து
கடையெனுநாளின் மடிபடவொருங்கா ... த்
தன்னிடஞ்சேர்த்துத் துன்னொளிபூத்து ... த்
தனிப்படவிருக்கு நனிப்பெரும்பொரு ... ளே
உருக்கொடுதொண்டர் கருக்கடல்கடத்த ... ப்
பயில்சேர்மயிலும் வெயில்கூரயிலு ... ... ங்
கொண்டெழிலுடனே யண்டர்கள்பரவ ... த்
தண்டலைமதுவை யுண்டொளிரறு ... ... கா
றுழனியேபுரியும் பழனிமாமலைமே ... ... ற்
கெழுமியகுகனே மழுவிறைமக ... ... னே
அருள்செயவருவா யழகி ... ... ... ய
மருமலர்நீப மருவியபுய ... ... ... னே (அ)

### ஆசிரியவிருத்தம்.

புயல்வருணமுறுமாலு மளிமுரலுமலர்வந்த புத்தேளுமிக்கானசீர் ... ப்
புலவர்களினிறையவனு மமரர்கணமொடுதுதி புரிந்துபூமாரிபெய் ... தே
இயல்பெருகுதூரியத் தொனிமுழக்கிப்பீலி யிருபுடையுநின்றுவீ ... ச
இணையற்றதவபுனிதர் மறைசொற்றுமுகமனுட னினிதாகவாசிகூற ... ச்
செயலுடையபழவடிய ரரஹரகுகாமுருக ஜெயபோற்றிபோற்றியென்ன ச்
சிற்றிடைக்கொடிதெய்வ யானையும்வள்ளியுஞ் செய்யபுயவரைநெருங் க
அயிலதுகரத்தெடுத் தருவிமணிசொரிபழனி யசலமிசைகொலுவிருக்கு... ம்
ஐயனேயமலகுண மெய்யனேயடியனுக் கருள்புரிகசமயமிது வே (கூ)

### சந்தவிருத்தம்.

இதுவன்றதுவன்றெனநின்றுளிரும் மெந்தாய்கந்தாநந்தாவே ... ர்
மதிகொன்றையணிந்திடுசங்கரர்தம் மைந்தாசெங்கேழின்பா... ... தா
அதிர்வண்டடர்தண்புனவங்கனைதன் னன்பார்நண்பாபண்பார்சீ ... ர்
முதிர்செந்தமிழின்றொடைகொண்டடியன் முன்பாவந்தாளெங்கோ னே (ய)

### வெண்பா.

எங்கோனெனும்பழனி யேகன்மலர்த்தாளல்லா ... ... ல்
இங்கார்கதிசொல்வா யென்னெஞ்சே-மங் ... ... கா
தவனருளைக்கைக்கொண்டா லன்றேநின்புன் ... ... மை
யவவினைகளெல்லாமறு ... ... ... ... ம் (௰௧).

### கலித்துறை.

அறுபகைநீக்கிப்ப ழனிப்பிரான்ற னருளதனை ... ... ப்
பெறுவகைதேட வறியாமடமைகொள் பேதைநெஞ்... ... சே
உறுமிறுமாப்புனக்கென்பலனீயு முறுதியுட ... ... ன்
பொறுமைகொண்டென்மொழி கேட்டாலதிகபுகழ்வரு ... மே (௰௨)

### நேரிசையாசிரியப்பா.

வருமலையதுவே பெருமலைபோல ... ... த்
தோன்றுபுமறைவது போன்றவிவ்வுலகி ... ன்
மயர்வெனுமழலா லயர்வுறவெதும்பி ... ... க்
கிளைதருமலமாந் தளைபட்டேங்கி ... ... த்
துளக்கறுசனன வளக்கருளழுந்தி ... ... ப்
பிணியெனுமட்டை பிடுங்கமெய்சாம்பி ... ... க்
களையடையாமற் கறங்குறுபக ... ... டா
யுழலாவணமென் மொழிதனைக்கேட்டு ... ... ப்
பழுதடர்குணங்கண் முழுமையுமினிதொரீ ... இ
நினைத்தவபின்றேறும் வனத்துலவுறுமர் ... க்
கடம்போலலையாத் திடந்தனையடைந் ... ... து
விழுமியவின்பருள் பழமறைப்பொருளா... ... ம்
பழனிமாமலைவாழ் குழகவேள்கழலி ... ... ற்
காந்தமிழுக்குங் கரும்பொனையுறழ்ந் ... ... து
நீங்காதணுகி நெக்குநெக்குருகி ... ... த்
துதிமிகப்புரிந் தாற்றுகள ... ... ... று
கதிதனைப்பெறுவாய் கழறினேன்மன ... ... தே (௰௩)

### ஆசிரியவிருத்தம்.

தேறுமறையாகமபுராணகலையாலுமினை செப்பரியபழனிமுருக ... ன்
சேவடியில்வழிபடும் பழவடியர்வழிதனிற் சேர்ந்துநீசென்றறிகிலா ய்
கூறுமவனபிதான மதைநினைந்தினியபுகழ் கூறிநனிகேட்டறிகிலா ... ய்
குறியாகவொருகணப் போதேனுமகிழ்வொடு குவிந்துதுதிசெய்தறிகிலா ய்
வீறுபெறயானுனக் கெத்தனைவிதங்களில் விளம்பினுஞ் சிறிதுமுணரா ... ய்
விபலமுறவறிதினிற் காலங்கழித்திடில் விமோசனம தென்றடைகுவா ... ய்
சேறுடையபீழையாம் பிறவிவருமென்றுகிஞ் சித்தேனுமச்சமிலை யோ
செறிவிலாநெஞ்சமேதஞ்சமே தினியமெய்ச்சீர்க்கதியையடைவதற்கே (௰௪)

### சந்தவிருத்தம்.

தற்பரகதிதனிலுய்த்திடு மதிபதிசர்ச்சனவடியர் களுளமலர்மே ... ல்
அற்புதமுடனுறை நிச்சயனறு குணனச்சுதனிருமலனிறையவன் ... மா
விற்பனர்புகழ் பழனிப்பதிதனில்வளர் வித்தகமுருகனைவழிபடினி ... ள்
உற்பவவலைகெடமெய்ச்சுக நிறைகளையுற்றிடவவனருளுவன்மன தே (௰௫)

வெண்பா.

தேங்குமுனதன்பரொடு சேர்த்துத்தமியேற்கு ... ... ப்
பாங்குதருமின்பமதைப் பாலிப்பாய்-பூங் ... ... கா
வனஞ்சூழ்சிவகிரியாய் வானோர்விழிவ ... ... ண்
டினஞ்சூழ் மலர்ப்பதத்த ... ... னே (மிசு)

கலித்துறை

தத்துந்தரங்கக் கடலையவுணர் தளக்கட ... ... லை
எத்தும்பொருப்பைத் திறற்சூர்மருமத் திடப்பொருப்பை க்
குத்துங்கதிர் வடிவேலாலெறிந்த குமரவுன்ற ... ன்
சித்தமிரங்கியருள்வாய் பழனியிற்றேசிக ... ... னே (மிஎ)

நிலைமண்டிலவாசிரியப்பா

தேசுறுஞானச் செழுஞ்சுடரொன் ... ... கோ
மாசறுதொண்டர் மனத்தெருளென் ... ... கோ
கதியருளின்பக் கற்பகமென் ... ... கோ
நிதியனவருள்சேர் நீள்கடலென் ... ... கோ
மோனங்கனிந்துகு முதிர்சுவையென் ... ... கோ
வானம்பரவுற வளர்கதிரொன் ... ... கோ
வேதத்துள்ளே மிளிர்பொருளென் ... ... கோ
நாதப்பிரணவ நற்கனியென் ... ... கோ
போற்றுறுபரம புனிதச்சிவமா ... ... ம
பாற்கடலுதித்தெழு பனிமதியென் ... ... கோ
அழகுறமலைதரு மம்பிகைகரத்தி ... ... ன்
மழலைமிழற்றிடு வண்கிளியென் ... ... கோ
இணையறுதிண்கை யிபமுகன்களிக்க ... ... த்
துணையெனவந்தருள் துடியடியென் ... ... கோ
வெள்ளிப்பொருப்பில் விளங்கித்தழைத்தி ... ... டு
வள்ளிக்கொடிபடர் மலர்த்தருவென் ... ... கோ
மொய்புரிமுலையா முனைமருப்புயரு ... ... ந்
தெய்வப்பிடிசேர்திறற் களிறென் ... ... கோ
பயில்பெறுமவுணப் பரவையைக்குடித் ... ... து
வெயில்விரிகதிர்வடி வேலவனென் ... ... கோ
பலமிகு பஃறலைப் பாந்தளொயுதறு ... ... ம்
வலியலகுறுமயில் வாகனனென் ... ... கோ
இகலிருளகல வியம்புசெஞ்சூட்டு ... ... த்
துகளறுகுக்குடத் துவசனென் ... ... கோ
வலத்திடுகீதனுர் மருக்கமழ்நீ ... ... ப
மலர்த்தொடைதழீஇ யவளைப்புயனென் ... ... கோ
விருப்பரங்கெனவே விபுதர்கள்பரவ ... ... த்
திருப்பரங்கிரிவாழ் சேவகனென் ... ... கோ
பூவினன்குடியெனப் புலவர்கள் வழுத்து ... ... ம்
ஆவினன் குடிசே ரறுமுகனென் ... ... கோ
நன்றுதோறுடிய நறுமலர்க்கழலா ... ... ற்
குன்றுதோறுடிய குழகவேளென் ... ... கோ
பேரலைவாய்துகர் பிறங்கியவயில்கொ ... ... டு
சீரலைவாய்தனிற் றிகழ்குகனென் ... ... கோ

மழுமுதிர்கரத்தான் மகிழ்ந்திடநடித்து ... ... ப்
பழமுதிர்சோலை வாழ்பாவகியென் ... ... கோ
பாரகத்துறையும் பல்லுயிர்க்கருட ... ... ற்
கேரகத்துறையு மிறையவனென் ... ... கோ
இவ்வயினுளனென் றிவ்வயினிலனெ ... ... ன்
றிவ்வணமுளனென் றியம்பரிதெனநா ... ... ன்
மறைகளுமுறையிடின் மதியிலாச்சிறியே ... ன்
அறைகுவலென்று லாசியமன் ... ... றே
சிற்றறிவதனாற் செய்திடுபிழை ... ... யை
முற்றுநீபொறுத்து முகமலர்ந்தருள்வா ... ... ய்
வயல்களிலுலவு மள்ளர்தஞ்சிறுமிய ... ... ர்
கயலெனத்தங்கள் கண்ணிழலதனை ... ... ப்
பெட்பொடுநீரிற் பிடித்திடத்துரீஇ ... ... த்
தட்பவெண்டரளந் தமையெடுத்தெறிந் ... ... து
நாண்கொடுநிற்புழி நறைமலரளித ... ... ன்
மாண்பெடையெனவவர் மதிமுகமடுத்து ... க்
கட்புலன்றன்னைக் கண்டதிசயித் ... ... து
நட்பின்மன்றிது நளினமாதலினு ... ... ன்
முகிழ்க்குமென்றஞ்சி முரன்றிடுமார்ப்பு... ... ந்
துகிர்க்காலன்னத் தொடலையினிரட்டு ... ... ஞ்
சுரர்மலர் மழையைச்சொரிந்திடுதொனியு ... ம்
வரமுல்வடியார் வழுத்துமோதையு ... ... ம்
வேதியர்மறைநூல் விளம்புமாரவ ... ... மு
மாதவர்முகமன் வகுத்திடுவகுளியு ... ... ங்
கின்னரர்யாழிற் கிளத்துறுமிசையு ... ... ம்
இன்னியமகலா திடிக்குமுழக்கமு ... ... ம்
அருமணிபொழியு மருவியினொலியு ... ... ம்
மருமலர்த்துடவை வாழ்குயிலனுதமு ... ... ம்
வண்டனவரம்பையர் மாலிசைக்குரலு ... ... ங்
கண்டனச்செந்தமிழ்க் கவிவலர்பழிச்சு ... ... ந்
தழனியுநிறைந்து தழைந்துயர்புகழ்சே... ... ர்
பழனிமாமலையுறை பண்ணவரர ... ... சே (௰௮)

ஆசிரியவிருத்தம்

சேதனமளித்தென துநீதுறுமவித்தையைச் சேதித்துமறைபரவுநி ... ன்
செவ்வியமலர்க்கழனிழற்கணெனைவைத்துதவி செய்தருள்சிவக்கொழுந்... தே
மாதிரநடுங்கவெண் பூதரநொறுங்கவுயர் வடவரைகுலுங்கிதமா ... ... ல்
வாரணமிரிந்திடத்தாரணிபிளந்துநீண் மகராலயந்துகளெ ... ... ழ
சூதுடையவசுரர்தங் காடுகண்மூழ்ந்துவான் சுடர்நெளியதுகுன்றிட ... த்
துனிமிகப்பொருதுவெங் கட்டகர்ப்பரியனே சுகமகிமைபெறுபெரிய னே
போதலர்ந்துகுநறவு நதியெனப்பாயுநெற் புலமிலகுபழனிமலைவா ... ழ்
புண்யனேபுகழ்பெருகுகண்யனேபெருமைசெறிபுனிதசுப்பிரமண்யனே (௰௯)

சந்தவிருத்தம்.

பிரமனைப்பிரணவப் பொருள்விரித்திடுகென... ப்
பிணிபடுத்தலைவிசித்தடர்சிரத்தினிலடி ... த்

தரணுறச்சிறையிலிட் டழன்மழுத்திரள்கர ... த்
தரன்மணிச்செவியினித் திடவகுத்தருளுமெய்ப்
பரமசற்குருபரச் சரவணக்குமரன ... ற்
பருமயிற்குகனெனப் பணியுமெற்கருள்செய த்
தருணமுற்றதுதிருப் பழனிவெற்புறைய்ட ... ற்
சமரகுக்குடதுசத் தறுமுகக்கடவு ... ளே (உ0)

வெண்பா.

கட்வுட்பிடிபிடிக்குங் கையாதமியே ... ... ன்
புடவித்தொடர்பெனும்புன் போகத்-திடையுழ லா
தற்புதஞானப்பரப் பிலாழ்ந்தமுதுண்ணப்பழ னி
வெற்புடையோய் செய்துவிளக் ... ... கு (உக)

கலித்துறை.

விளக்கியென்னுள்ளும் புறம்புமொன்றாக்கி மிகைப்பவத்தி ... ன்
அளக்கரினின்று கரையேறச்செய்தெனை யாண்டருள்வா ... ய்
பளிக்குயர்வேதியிற் றண்கதிரூரும் பழனிவெற்பி ... ... ற்
களித்துக்கடவுளர் போற்றக்குலாவிய காரண ... ... னே (உஉ)

நேரிசையாசிரியப்பா.

கார்நிறமிகுமுகி லூர்தியொடெல்லா ... ... ச்
சுரர்களுங்குழுமிப் பரனிடந்தமக்கு ... ... ப்
பகைவர்களியற்று மிகைகளைப்பக ... ... ர
நீற்றணிமேனிய ராறுமுகமெடு ... ... த்
தழற்பெறுதந்நுதல் விழிக்கொருபுலிங்க ... ... மா
விடுப்பவுமவற்றை யெடுத்தெரிமருத்து ... ... ச்
சரவணத்துய்ப்பக் கருணைசேரா ... ... று
குழவிகளாகி மழலைகள்பேசி ... ... ... ச்
சீர்த்திகொண் மூவிருகார்த்திகைப்பெண்களி ... ன்
குடத்தனவமுத மடுத்தெழிலோங்கு ... ... ம்
அம்பிகைகரத்தா லின்புருவொன்று ... ... ய்
நிவர்தருவடவரைக் குவடுகளசை ... ... ய
ஆழிகள்கலங்கிப் பூழிகளெழவெ ... ... ண்
மதிகதிர் தன்னிலை மாறிடத்திக்க ... ... ய
நடுக்குறவானத் துடுக்கணமுதி ... ... ர
விவைமுதலனந்த நவமதிற்சிறந் ... ... த
தொடலைகள்புரியத் திடவரர்மூனிந்தே ... ... ண்
அரக்கனென்றுள்ளி யடற்சமர்விளைக்க ... ... க்
கழிந்திடச்செய்துபின் பெழுந்திடவரு ... ... ளி
நாரதன்மகத்தி னண்ணியவயத் ... ... தை
வீறுறப்பரியா வேறியுகைத் ... ... ... து
விதியைமறைப்பொருள் வினவிச்சிறைபி ... ட்
டீசன்றனக்குப தேசம்புரிந் ... ... து
மறையவன்றன்னைச் சிறைவிடுத்தகற் ... ... றி
யயிற்படையதனை யளித்திடப்பெற் ... ... று

திறற்புயவீரர் சிறப்பொடுசூ ... ... ழ்
நின்றடல்விளைத்துக் குன்றொடுவலிசே ... ... ர்
தாருகனுயிரைச் சமனுக்குதவி ... ... த்
திகழ்வளம்பொலிந்த சேஞ்ஞலூரொய்தி... ... ப்
பராசரன்புதல்வர் துரால்சனிப்பொழி ... ... ய
அருணனிபுரிந்து தெருளுடன்மலர்ந்த ... ... ங்
கந்தரர்பரவச் செந்திலிலிருந் ... ... து
சயேந்திரன்வெருவு மயேந்திரச்சூர ... ... ன்
றிண்மையும்வரத்தி னுன்மையுங்கடா ... ... வி
விண்ணவர்சிறையை விடுத்துச்சுகத் ... ... தை
நண்ணுதனலன்கொ னலிவுறனலங்கொ... .. ல்
என்றஃதுணர்வா னெழின்மிகுவயமா ... ... ர்
புயன்றனைத்தூதா நயம்பெறத்தூண்டி ... ... க்
காருடல்வெஞ்சூர் சீரடையாதா ... ... ற்
கொலைத்தொழில்வேலாற் றொலைத்திடக்கருதி ... த்
தேர்மிசையெஃகிப் பாரிடத்தலைவ ... ... ர்
நூற்றெண்மர்களும் போற்றிடப்படர்ந் ... து
பாசறைதன்னிற் றேசுறவிருந்தா ... ... ங்
கெண்ணிலரக்கரை மண்ணுக்கிறையி ... ... ட்
டரிமுகன்முதலா மருந்துணைவரையு ... ... ங்
கதிர்ப்பகையாதியாங் காதலர்தமையு ... ... ம்
படுத்துச்சூர்தன் பல்வளமுட ... ... னே
சுற்றமுந்திறலும் வெற்றிகொண்மாயமு ... ... ம்
ஆயிரத்திருநான் கண்டத்தாள்கையு ... ... ம்
அழிவறுதனுவு மெழிலொடுபலமு ... ... ம்
இந்திரஞாலத் தந்திரத்தேரு ... ... ம்
விடங்கமேவிய மடங்கலூர்தியு ... ... ம்
ஆக்கமுங்களிப்பு மூக்கமுஞ்சிறப் ... ... பு
மாளுறச்செகுத்துக் கூளிகடமக் ... ... கு
விருந்துகளாகப் புரிந்திடவன்று ... ... ன்
மாழையாவெதிர்ப்பக் கேழயிற்படையா ... ல்
ஈர்த்திரண்டாக்கிச் சீர்த்திகொண்மயிலு ... ... ஞ்
சேவலுமாகச் செவ்விதினடாத்தி ... ... ப்
பண்ணவரார்த்துத் தண்மலர்தூற் ... ... றி
எங்களுக்கிருந்த விடர்களைமாற் ... ... றி
மங்களமுதவும் வல்லவாபோற் ... ... றி
முருகனேபோற்றி முதல்வனேபோற் ... ... றி
பரமனேபோற்றி பாவகிபோற் ... ... றி
என்றவர்வழுத்தச் சென்றவணொரீ ... ... இ
வண்டினமுரலுந் தண்டலைசெறியு ... ... ந்
திருப்பரங்கிரியில் விருப்புடனணுகி ... ... ப்
பஞ்சடிச்சிற்றிடைக் குஞ்சரிதன்னை ... ... க்
கடிமணமிழைத்துக் கனகமாநகர்க்கு ... ... த்
தேவர்கள் சூழ்ந்து கோவெனத்தாழ்ந் ... ... து
பல்லியந்துவைப்பப் பனிமலருகுப்ப ... ... ச்
சென்றிந்திரற்குத் திருமுடியளித்து ... ... க்

கந்தமாசலத்திற் களிப்புறவைகி ... ... க்
குஞ்சரிமாதொடு கொஞ்சியிருந்துபி ... ... ன்
றணிகைவரைக்குத் தானெழுந்தே ... ... கி
ஏனற்புனத்தின் கானக்குழலியை ... ... ப்
பரிணயஞ்செய்து பண்புடனிருவரு ... ... ம்
புகழ்ந்தருகிருப்ப மகிழ்ந்தருளிறை ... ... நீ
அடியார்கட்கருளக் கடிமலர்ப்பொழில்சூ ... ... ழ்
தருபழனுபுரி வருகுருபர ... ... ... னே
புன்மலவிருளைப்போக்கு ... ... ... பு
நின்மலமோன நிலையருளெனக் ... ... கே (௨௩)

## ஆசிரியவிருத்தம்.

கேசரம்பொதிமுளரியாசனன்கரமதிற் கிணியொலிமுழங்கவிளைபா ... ள்
கிழவனதிர்முழவதுமுழங்கவிருகழல்களிற் கெழுவுபரிபுரமுழங் ... க
வாசமுறுசடிலமிசைவரநதிமுழங்கமது மலியிதழியளிமுழங் ... க
வலியரவினொடுமறிமுழங்கமலர்மழைபெய்து வரர்கள்புரிதுதிமுழங்க... த்
தேசுடையமுயலகன்வெதும்பமலைமகடகவு செறிவிழிகள்களிததும்ப ... ச்
சிற்சபையினடனமிடுதற்பரமர்மடிமிசைத் திகழாடல்புரிமுருக ... னே
பூசலிடுவினையகலமெய்ஞ்ஞானசாரம் புகட்டிவரமினிதருளுவா ... ய்
புவிவனிதைதிலகமெனவணிமருவுபழனிமலைபொலியவளர்குமரகுருவே(௨௪)

## சந்தவிருத்தம்.

குருமணிப்பைங்கலன்றுன்றுபுகுடநிகர்க்கும்பருங்கொங்கைய ... ர்
கொடுமயக்கம்பொருந்துங்கலவிபைவெறுத்தந்தரங்கந்தனி ... ல்
ஒருமைபெற்றுன்செழுந்தண்கழலிணையை நித்தம்பணிந்தின்சு ... க
முடனிருக்குந்திறந்தந்தருளூரமிகுத்தன்றடங்கொண்டட ... ... ர்
செருவினிற்சென்றெதிர்ந்தோன்றியநிருதனைக்கண்டிதங்கண்டி ... டு
திகிரிபற்றுங்கரன்றன்றிருமருகமெய்ச்சுந்தரங்கொண்ட ... ... வ
மருமலர்ப்பங்கயஞ்சிந்துறுநறவுதுய்த்தங்கிருந்தொண்கு ... ... ட்
வளைகண்மொய்க்கும்புலம்பொங்கியபழனியிற்றங்கிடுங்கந்த னே (௨௫)

## வெண்பா.

கந்தரத்தைமானுங் கருணைபொழிந்தென்வினையா ... ம்
பந்தவெப்பநீக்கிவரம் பாலிப்பாய்-சந்ததமு ... ... ந்
தண்குயில்கள்பாடத் தழைமயிற்குழாமாடு ... ... ம்
வண்பழனிவாழ்வேல ... ... ... ... வா (௨௬)

## கலித்துறை.

வாசமருவும் பழனுபுரியின் மகிழ்ந்திருந் ... ... தே
தேசடர்கூடலிற் சம்பந்தனுகிச் செழுங்கழுவி ... ... ற்
காசுறுகுண்டச் சமணரையேற்றிய காவலவெ ... ... ற்
காசகல்போத மளிப்பாயறுமுக மார்மதி ... ... யே (௨௭)

## நிலைமண்டிலவாசிரியப்பா.

மதிகதிருடுக்குல மல்குறுவிசும்பி ... ... ல்
வதிமினலுறழிவ் வாழ்க்கையவெஃகி... ... ப்

பூதலந்தன்னிற் பொருணசைமிகுத்து ... ... த்
தீதுறுபிசுனத் தீயர்பாலே ... ... கி
வள்ளியனெனச்சொல் வகுத்துக்களரி ... ... ற்
பொள்ளெனவுமிழ்தைப் பொழிதல்போற்கவி ... தை
பாடித்தினையும் பலனடையாம ... ... ல்
வாடிக்கறங்கா வண்மையைபுத ... ... வி
நின்பொலன்கழலி னிழலிலிருந்தி ... ... ங்
கன்புடன்வழுத்து மறிவதுநல்கி ... ... த்
தேமலியிந்துளச் சிகழிகையுடனெ ... ... ன்
பாமலிசெந்தமிழ்ப் படலையைவனைங் ... ... து
வரந்தரவருவாய் வளர்சிவகிரியி ... ... ல்
நிரந்தரங்கருணை நிறைந்துறைகுக ... ... னே (உஅ)

## ஆசிரியவிருத்தம்.

நேர்பொருதுதண்டமும் பாசமுங்கொண்டுபிறை நிகரொபிறதுக்கிமுழைபோல்
நிவந்திடமகன்றவன் பகுவாய்திறந்தடு நெருப்பெழவிழித்துயிர்த் ... தே
ஆர்வமகலிகளியென வதிர்தரவொலித்தடரு மசலம்பொதிர்ப்பவல்லி ... ல்
அல்லிவரியற்கைபோன் மூரிக்கடாவிவர்ந் தடலியமனணுகுற்றிடி ... ல்
ஏர்மருவுமயிலேறி யயிலுடன்சேவலு மெடுத்தடைக்கலமாகி ... ய
எளியேன்முனஞ்சலெலன வந்தெனைக்காப்பதற் கின்றேயியம்பிவைத்தே ன்
தேர்கரிகள்பரிநிரைக ளுடனரசருலவுமணி திகழ்மறுகுசூழ்பழனிவா ... ழ்
சீர்த்தியேநிறைவுதரு பூர்த்தியேகருணைகனி செறியாறுமுகமூர்த்தியே (உகூ)

## சந்தவிருத்தம்.

ஏதமுறுபோகவலையாடிமனம்வாடுமடி யேனையுனதார்கருணையா ... ன்
மோதமொடுஞானபரிபூரணசுகானுபவ மோனவலைபாடவருள்வா ... ய்
ஆதிமணிமாசுணபணாமுடியின்மீதுஜதி யானதுவழாதுமுறையா ... ய்
நாதமுட்னடிடுமயூரமிவர்தூயபழ னாபுரியில்வாழ்முருக ... னே (௩ம)

## வெண்பா.

கனமாயவல்லிருளைக் காய்ந்தினிதாயெந்த ... ... ன்
மனமாகுங்குன்றின் மிசை வந்தோர்-தினகரன்போ ... ல்
வீற்றிருப்பாய்தென்பழனி வெற்பின்மிசைவிண்ணவர்க ... ள்
போற்றவளர்கின்ற புல ... ... ... ... வா (௩க)

## கலித்துறை.

புலவிகொள்பூகக் கமுத்தியர்மாயப்புன் போகமெனு ... ங்
கலவிச்சுரத்திற் கறங்குகின்றேனைக்கை தூக்கிம ... ணி
நிலவிக்குளிருநின் றுண்மலர்நீழலை நேர்ந்தடியே ... ன்
குலவிக்களிக்க வருள்வாய்பழனிக் குருபர ... னே (௩உ)

## நேரிசையாசிரியப்பா.

பரவும்புலனையும் பகர்பொறிசளையு ... ... ம்
அம்பணமென்ன வடக்கியுட்கொண் ... ... டு
செறிமுக்குணத்தைச் செகுத்துக்குன்ற ... ... ப்
பூரகமிரேசகங் கும்பகமென்னு ... ... ஞ்

செயலிற்காலைச் சேரப்பயின் ... ... று
தெரிநடுநாடி சென்றுமுச்சுடரி ... ... ன்
கதிர்மண்டிலத்தைக் கடந்துபோய்மேலா ... ம்
உர்கநீண்முடிமே லுறுமொருதுணி ... ... ற்
சலமறவுற்றோர் தம்மலவிருளை ... ... க்
குடித்துக்குணமாங் குன்றின்சிகைமே ... ... ல்
நனியொளிபரப்பு ஞானவிளக் ... ... கே
உன்றனைபுணரு முணர்விலாச்சிறியே ... ... ன்
பந்தந்தபவரம் பாலித்தருள்வா ... ... ய்
கடைசியர்செங்நெல் களைந்திடக்கரத்தி ... ... ன்
ஞெடியொலியதனற் றுலுக்குற்றெழும்பி ... ச்
சேற்குலந்தாக்கச் செங்கழையுகுக்கு ... ... ம்
நித்திலக்குவையா னிள்களாமலிந் ... ... த
வயல்சூழ்பழனியின் மணிக்கதிரொறிப் ... ... ப்
ஓங்கியசிகரி யுற்றுய ... ... ர்
ஓங்கலிலுலவு மொருதனிப்பொரு ... ... ளே (௩௩)

## ஆசிரியவிருத்தம்.

பொருவில்பன்னிருகதிர்க ளிற்பாதியிந்துவாய்ப் புதுமையொடுகூடினவெனப்
புனைமுடிகளுடனறு வதனங்களாடவருள் புனிதவிழிகளிலாடந ... ற்
குருமணிச்செவிகளிற் குழையாடமார்பினிற் குலவியமதாணியாட ... க்
குவவுமற்புயசயில மீதுகிம்புரியுடன் கொங்கவிழுநீபமாட ... ... ச்
செருகுமிடைதன்னிலரை வடமாடவிணையடிச் செய்யகிண்கிணியாடமெய்த்
தேவியர்கள்குமுதவாய் முகமனுடக்கரத் திருவேலிஜெளியாட ... வே
மருவிநடமாடுமயி லேறிவிளையாடிமுன் வந்தெனக்கருள்புரிகுவா ... ய்
மதுகரம்பயில்பொழில்கொள் பழனியங்கிரியின்மிசை வளருமங்களகுமரனே
(௩௪)

## சந்தவிருத்தம்.

மரகதவெற்போடொப்பாய்முற்பாய் வலியனுமத்தோகைக்கோனற்றே ... ர்
அரியையுகைத்தேமெய்ப்போரிற்றோ யடன்மிகுபற்றுனாச்சேதித்தோ ... ன்
வரமருகப்பேர்பெற்றோயெற்கே மறுசனனப்பாடெய்க்காதச்சி ... ர்
தருகதியைத்தாகற்றோர்மிக்கோர் தகைபழனித்தானத்தாயுற் றே (௩௫)

## வெண்பா.

தாயிற்சிறந்த தகவுடையோய்காயே ... ... னை
மாயப்பவப்பிணிகள் வாட்டாமல்-நேயத் ... தோ
டுன்னருளாமாமருந்தை யுண்ணவளித்தாள்பழ ... னி
தன்னிலுறையும் பண்டி ... . ... தா (௩௬)

## கலித்துறை.

தாராளமாகநின் றிந்நாள்வரையெனைத் தான்புரிந் ... த
ஏரார்பதுமக் குலாலன்றன்கையிலி னிப்புரி ... ய
நேராமலென்றனை நின்றுட்கமல நிழலில்வைப்பா ... ய்
காராருந்தண்பொழிற் றென்பழனுபுரிக் காங்கெய ... னே (௩௭)

## இணைக்குறளாசிரியப்பா.

காந்தழனெய்யெனக் கன்மனதுருகி ... ... ச்
சாந்தமெய்ஞ்ஞானச் சலதியிலா ... ... டி
அற்புதமார்ந்துயர் மெய்க்கதிசேர்ந்தி ... ... ட
நனிவரந்தனைநீ மனதுவந்தருள்வா ... ... ய்
அரனிடமுறைந்து பெருமைகணிறைந் ... ... து
இமாசலவிறைதரு குமாரியெனவ ... ... ரு
மங்களமுற்றெளிர்மாதரி துங்கவரிக்கொருசோத ... ரி
தந்தருண்மந்திரநிச்சயா கந்தகதம்பமணிப்பு ... யா
கானக்குறத்தியின்மோகனே மோனத்தவத்தர்செய்யோகனே
சிலவனப்பெடையாலிய கோலவரிப்பணைகோலி ... ய
தென்பழனிக் கிரிச்சிகர ... ... மீ
தன்பொடுவரர்துதி யறையவுற்றவ ... ... னே (௩அ)

## ஆசிரியவிருத்தம்.

உற்றமணிநித்திலக்கவிகையண்டந்தடவ வொண்கொடிகடிசைமைமூ ... ட்
ஓதுகேளிப்பாளையொத்தசாமரையசைய வொளிர்சிவிறிதென்றல்வீச ... ப்
பற்றிவருதோரணமிலங்கிடப்பகர்தரும் பஞ்சவாச்சியமுழங்க ... ப்
பரதமுறைபிறழாதுகைத்தொழில்விழித்தொழில்கள் பயிலரம்பையர்நடிப் ப
வெற்றிபெறுசக்கிரிபொட.ச்சுரகணத்தொகுதி மென்மலர்பொழிந்திறைஞ் ச
மிகுதவர்கள்புகழவைராவதத்தேறியே வியனுலகுபவனிவருவோ ... ய்
அற்றமுறுபிறவியில்விடேலுன்னைநம்பினே னுதரித்தருள்புரிகுவா ... ய்
அரியபொற்புரிசைதிகழ்பழனிவெற்புலவுமெழிலறுமுகப்புனிதகுருவே (௩௯)

## சந்தவிருத்தம்.

குருதிக்சட்லிற்குடைந்துமகிழ்வொடு குடைாப்புயமிட்டெழுந்துநிரைாநி ணா
மருவிச்செருவிற்குணுங்குதுதிசெய வலிமிக்கவுணக்கருங்கடலின்மி ... சை
பருநிச்சுடரிற்சிறந்தவயில்விடு பதுமக்கரவெற்குயர்ந்தநலனரு ... ள்
பொருவற்றிடுநற்சுபங்கணிறைதரு புனிதப்பழனிக்குகந்தகடவு ... ளே (௪௰)

## வெண்பா.

கடல்போலருணிறைந்த காட்சியேயன்ப ... ... ர்
இடர்போக்குந்தேவே யிறையே-மடல்வன ... ... ச
வாவிசெறியும்பழனி வாழ்வேதகவுடனி ... ... ப்
பாவிதனைவந்தாள்கண் பார்த் ... ... ... து (௪௧)

## கலித்துறை.

துதித்துன்கழலின் மலர்தூஇப்பணிந்து தொழுமடியா ... ர்
பதத்தின்பொடியென் றன்புன்றலைமீது படப்பெறினு ... ங்
கதிக்குச்சுதந்தர னுவேன்றிகழ்ந்தசெங் கஞ்சமி ... சை
யுதிக்குந்திருமரு வும்பழனபுரி யுத்தம ... ... னே (௪உ)

## நிலைமண்டிலவாசிரியப்பா.

தமரொனுமடியார் தம்முளவனச ... ... ங்
கமழ்தரவரும்பிக் கனிந்துகுற ... ... வே

அன்பான்முகந்தங் கருந்திடநினைப்போ .. ர்
தம்பாலினிக்குந் தனிச்சுதைமடு ... ... வே
மலைமகள்விழியெனு மணியுற்பலங்க ... ... ள்
அலர்தரவெழுமெழி லறுமுகமதி ... ... யே
ஏந்திளம்பிறைச்சடை யிறைமனமகிழ்ந் ... ... து
மோந்திடவெடுக்கு முதிர்சுவைக்கனி ... ... யே
சேடடர்சிந்துரத் திருமுகன்களிகூர் ... ... ந்
தாடிடவழைக்கு மரியநற்குருந் ... ... தே
வண்புனமானும் வளர்குஞ்சரியு ... ... ம்
பண்புடனணைக்கும் பவளக்குன்ற ... ... மே
வினைமிகும்பிறவி வெப்பமகன்றிட ... ... ப்
புனிதமெய்க்கருணை பொழிதருமுகி ... ... லே
துனிமலத்திமிரந் தொலைத்தென்னுளத்தி ... ல்
நனியொளிபரப்பு ஞானக்கதி ... ... ரோ
விரவிடமயக்கும் விண்புன்சமய ... ... க்
கரிகளையடுதிண் கண்டீரவ ... ... மே
ஆறக்கரமு மணிதிருநீறு ... ... ம்
வீறுற்றோங்க விதித்தமெய்க்குரு ... ... வே
நின்றாள்பணியு நெறியிலாச்சிறியே ... ... ன்
குன்றாச்சுகத்திற் குளித்திடவருள்வா ... ... ய்
கானகமேதிக் கந்தரங்குழு ... ... மி
வானகமதிருற வகுளிகள்கொண் ... ... டு
கரில்பெறுசிறுசெங் கண்மினல்மின்னி ... ... ச்
சொரிதருபாலின் றூயவெள்ளரு ... ... வி
முழைதொறுமுறங்கு முதுப்பணிமணியு ... ங்
கழைதருமணியுங் கரிவல்லுளிவெ ... ... ண்
மருப்புறுமணியும் வாரியிழிந் ... ... து
தருப்பொலிதண்டலை தன்னையுங்கன்ன ... ... ற்
காட்டையுங்கேளி கதலிவருக்கைமா ... ... ங்
காட்டையுமுறித்துக் கயந்தனிற்சென் ... ... று
புகவதிலுறையும் பூம்புட்கரத்தி ... ... ன்
முகையுடைந்தொழுகுறு முருகடர்தே ... ... றே
டெல்லாத்தேறலு மீண்டியோர்காலா ... ... ய்
நல்லார்களன்போ னடைகொடுபாய ... ... க்
குழைபுரிந்துழவர் குலவிக்கொழுக்கொ ... ... ண்
டுழுதிடுசீதையி லொளிர்மணியுட ... ... னே
தண்பிழியூறற தும்பக்கடைசிய ... ... ர்
வண்டொடிக்கரத்தால் வாரியெடுத்து ... ... த்
தங்கள்வெண்ணகைக்குந் தகையிதழ்ப்பிழிக்கு ... ம்
இங்கிவைமாறா மெனத்தரளத்தை ... ... க்
களையிடவோங்குங் கழனிசூழ்பழ ... ... னி
வளாமிசைநாளும் வளர்முருகோ ... ... னே (௪௫)

ஆசிரியவிருத்தம்.

முருகேறுகற்பகத்தருநீழலிற்குலவி முனையேறுதனையுயர்த்தோ ... ன்
முடிமீதுமுடியேறிவியனுலகுகுடியேற முதமேறிமனதுதேற ... க்

குருகேறுவிதிமுதற்புகழேறுவரர்கணங் கூடிப்பணிந்துநிரலா ... க்
குளிரேறுகரமலர்கள்சிரமேறவமரேறு கொடியசூரேறுவென்றே ... ய்
சருகேறுதருவதிற்றளிரேறுபரிசெனத் தமியேனிடும்பைநீங்கி ... த்
தகைமையேறுசுகமதுதழைக்கவருள்செய்திடத் தனிமயிலிலேறிவருவா ய்
திருகேறுவளைகடருகதிரேறுமணிகளாற் செய்களைகளேறுவயல்சூ ... ழ்
தென்பழனியங்கிரியிலன்பர்கணெருங்குபுதி னந்தொழவருங்குமர னே (சச)

சந்தவிருத்தம்.

குமரகுருபரனிைது பங்கயச்செங்கழ ... ... ற்
குளிர்நிழலைமருவியமு துண்டுவக்குந்தகை ... ... த்
தமரனையவடிமைகளி லொன்றெனக்கொண்டெனை ... த்
தழுவியருள்புரிகஜெய துங்கமுற்றும்பல்பெ ... ற்
றமரணியுமயின்முதுகி லண்டர்மெச்சும்படி ... ... க்
கணிகலெனநடனமிட வந்துநித்தஞ்சிறை ... ... ப்
பமரமொடுகுருகுமுரல் கொந்துநற்பைம்பொழி ... ற்
பழனிமலைதனிலுலவு சுந்தரக்கந்த ... ... னே (சரு)

வெண்பா.

கந்தமலர்நீபா கருணைபொழிந்தென்வினைக ... ... ள்
கந்தமலக்கங்குறனைக் காய்ந்தினிது-கந்தம ... ... ல
ஞானச்சுதைபருத்தி நாயேற்கருள்புரிவா ... ... ய்
கானப்பழனி முரு ... ... ... ... கா (சசு)

கலித்துறை.

காரேந்துநஞ்சந் தனையுண்டவற்குங் கரத்தடக் ... கி
நீரேந்துபௌவந் தனையுண்டவற்கு நிகழ்த்தரி ... ய
சீரேந்துமெய்ப்பொருள் போதித்தவாவருள் செய்திரு ... ந்
தாரேந்துநந்தனஞ் சூழ்பழனபுரிச் சற்குரு ... ... வே (சஎ)

நேரிசையகவல்.

வேகப்பூதமும் விரவியபொறியு ... ... ங்
கரணமுங்குணமுங் கதமுறுமாயையு ... ... ம்
ஆணவவிருளு மகலுறப்போழ்ந் ... ... து
முச்சுடருக்கு முதிரொளிவி ... ... சி
உள்ளும்புறம்பா யொருபொருளாகி ... ... ச்
சராசரமனைத்துந் தயங்கியவெளியா ... ... ய்
நவிறலுக்கெட்டா ஞானபூரணமா ... ... ய்
நின்றநின்காட்சியை நெறிதவிர்தமியே ... ... ன்
காண்டிடவிரங்கிக் கதிதருகுருவா ... ... ய்
வந்துபுன்பழுதை வலியரவென் ... ... னு
மருளையகற்றி மனத்திடந்தருவா ... ... ய்
பிடியினநோக்கிப் பிளிறிடக்கன்றை ... ... க்
குன்றவர்சிறூர்கள் கொடியால்விசித்து ... ... த்
தேக்கிலைத்தறப்ஞ சேர்த்ததிலிவர்ந் ... ... து
வேய்க்குருத்தங்குசம் விளங்கப்பிடித்து ... ... ப்

பண்ணுவராகிப் பண்புறநடாத்தி ... ... க்
குலவிடுசந்தனக் குளிர்வனஞ்சூழு ... ... ம்
பழனியங்கிரிமேற் பண்ணவ ... ... ர்
தொழவருசண்முகச் சுந்தரமணி ... ... யே (சஅ)

ஆசிரியவிருத்தம்.

தாரூலவுமுப்புரந்தனைவென்றதந்தையுஞ் சதிமயிடனைத்தடிந் ... த
தாயும்பலம்பெறுமிலங்கையிறைதனையட்ட தனிமாமனும்வறுமையா ... ஞ்
சுரமதையொழித்துதவுதிருவானமாமியுந் துங்கக்கயாசூரனை ... த்
துசளுறவிகுத்ததொருதுணைவனுங்குறையறத் தொகையொடுபடைத்தனைய
மரபின்வழிவண்ணமேபடல்பெருகுசூரனைவதைத்துமற்புயசயிலமேல் [தொன்
வாகையணியுன்றனக்கென்வினைப்புன்பகையை மாற்றவரிதோநவிலுவா... ய்
சிரமமறுதவவிரதர்புகன்மறைகளைக்கிள்ளை செய்யவாயிற்பயில்வுற ... ச்
சிறப்பொடுதளிர்த்திடுமலர்த்துடவைபெற்றெளிர் திருப்பழனியுற்றவர சே
(சகூ)

சந்தவிருத்தம்.

சேமமருள்கந்தனைப்பாமலிப்ரபந்தனைத் தேவர்புரிவந்தனைக்குரியோனை ... க்
காமர்மிகுபண்பனைச்சீரடியர்நண்பனைக்கானமகள்கொண்கனைப்பெருவாழ்வைத்
தாமமலர்பங்கயத்தோடைகணெருங்குறச்சார்பழனியெந்தையைப்பணிவோர்க
டேமெமுசண்டனைச்சாடிமரணங்கெடத் தோமறுசுகந்தனைப்பெறுவா ரே [ட்
(ருய)

வெண்பா.

வாரணிந்தகொங்கைதிகழ் வள்ளிதழுவபு ... ... யா
போரணிந்தவேலாபுனிதமுறு-நீரணிந் ... ... த
வேணியார்தந்தருளும் வித்தகாதென்பழனி ... ... க்
காணியாய்தந்தாள் க ... ... தி (ருக)

கலித்துறை.

கதித்தவறுசமயத் தெய்வம்வேறன்று காண்பினெங்கு .. ம்
உதித்தவொருபொருள் யானேயென்றூர்க்கு முணர்த்துதல்போ ற்
றுதித்தவறுமுகங் கொண்டோயெனக்கரு டொன்மறைநூ ... ல்
விதித்தவனற்சிக்குந் தென்பழனுபுரி வேலவ ... னே (ருஉ)

நிலைமண்டிலவாசிரியப்பா.

வேலைநேர்சுகத்தில் விடுக்குநின்கழலி ... ... ற்
சிலமாப்பணியாச் சிரமுஞ்சிர ... ... மோ
நவமதன்வெட்கிட நண்ணியநின்மெய் ... ... க்
கவின்றனைக்காணுக் கண்ணுங்கண் ... ... ணோ
கருப்புகவொட்டாக் கருணைசேர்நின ... ... து
திருப்புகள்கேளாச் செவியுஞ்செவி ... ... யோ
பழுத்திடுமின்பம் பணிக்குநின்பெய ... ... ரை
வழுத்திடவறியா வாயும்வா ... ... யோ
துனிமலவிருளைத் தொலைத்தருணின்னை ... ... க்
கனிவொடுபுசியாக் கரமுங்கர ... ... மோ
சனைப்பவமொழித்துக் கதிதருநினை ... ... யே

நினைத்திடப்பயிலா நெஞ்சமுநெஞ்ச ... ... மோ
துன்னெளியிமையோர் சூழுநிலைய ... ... ந்
தன்னைவலஞ்செயாத் தாளுந்தா ... ... ளோ
பந்தமகற்றும் பழம்பொருளாநி ... ... ன்
சிந்தனையில்லாச் செல்வமுஞ்செல்வ ... ... மோ
ஆதலாலடியே னவ்வணமுயல ... ... ப்
போதமுணர்த்திப் புரந்தருள்புரிவா ... ... ய்
மாதவநெறியோர் வம்மின்வம்மி ... ... ன்
தீதவநெறியோர் சென்மின்சென்மி ... ... ன்
என்றேவிளிக்கு மெழில்பெறுவிடங்க ... ... ம்
நின்றேவிளங்கி நீணபந்தடவு ... ... ம்
பொன்னெயிற்பழனிப் பொருட்டினிலுல ... ... வு
நன்னயவமரநாயகவே ... ... ளே (௫௩)

## ஆசிரியவிருத்தம்

வேளுளமயக்குவிழிகேளுறவினிக்குமொழி வெங்கடிதடப்படுகு . ... ழி
வெண்புரியையெதிர்கண்டமொண்குமிழையிகறுண்ட மிளிர்பணிகளொடுபல்
தாளமதைநிகர்குயம்நீளுமமையுறழ்புயந் தகவில்சதிநிறையிருதயந் [பண்டந்
தங்கமயவுருவமுற்சங்கையறுகருவநற் றகைபெறுமிளம்பருவம ... ற்
கோளரியையடருமிடைதாளவிருமெகினநடை கொண்டமடவனிதையர்புடை
குலவியழலெனமோதுகலவிதனிலுழலாது குவிநினைவையருள்செய்தோ து
நாளமுறுகோகனகமாளிகையில்வாழ்கனக நங்கைநிதம்வளருமன ... க
நற்பழனிவாசனேயுற்பவவிநாசனே நவமருவுகுமரேச ... னே (௫௪)

## சந்தவிருத்தம்.

குமரிதருஞ்சுதவிகசிதமங்கள குணதரசம்ப்ரமசிங்கா ... ரா
அமரவலங்க்ருதபரிம்ளவிந்துள வசலபுயம்பெறுசங்க்ரா ... மா
நிமலநிரஞ்சனசரவணசம்பவ நிகமரசஞ்செறிசங்கீ ... தா
தமரதடஞ்செறிபழனியுறைந் தவதகவுடன்வந்தருளெங்கோ... வே (௫௫)

## வெண்பா.

வேதனைகள்சாராமல் வெந்துமனம்வாடாம ... ... ற்
கேதமொடுபாயிற்கிடக்காமற்-பூதலத்தி ... ... ல்
வாழ்வித்தெனைப்பழனி மாமலையோய்சேர்த்தருள்வா ... ய்
கேழ்வைத்தநின்றாளின் கீ ... ... ழ் (௫௬)

## கலித்துறை.

கீழுங்கணையெனக் கேழுறுகண்ணியர் கேண்மைகொண் ... டு
தாழும்விருப்பத்தின் மாழ்குந்தமியனின் றண்டைய ... ணி
சூழுங்கழன்மிசை வீழும்பெருமையிற் றோய்குவன்கொ ... ல்
ஆழும்பெருந்தவர் வாழுஞ்சிவாசலத் தாரமு ... தே (௫௭)

## நேரிசை யாசிரியப்பா.

ஆர்கலிசூழும் பாரகமீ ... ... தி
அன்னைதன்கருவின் மன்னிச்சனித்து ... ... க்

குழவித்தநியின் மழலைகள்பயின் ... ... று
யௌவனவயதிற் கொவ்வையினிதழிய ... ர்
பெட்பதைகனைந்துள் ளூட்குபுமயலா ... ... ங்
கடலிடைப்படிந்து திடமதுதணந் ... ... து
மனைவியைமக்களைக் கனமுறுமுறவை ... ... ப்
புரந்திடல்வேண்டிப் பொருணசைபூண் ... டு
கைதவங்கூறிக் காசுகடேடி ... ... ... ப்
பிச்சையுமுதவாப் பிசுனனு... ... ... கி
அகட்டைவளர்த்துப் பகட்டொடுநடித்... ... து
மூப்பினிலோங்கி மூன்றுகாமுங்கி ... ... ச்
சிதடுஞ்செவிடுஞ் சேரவிளைத் ... ... து
வறுமையுநோயும் வந்துறவாக ... ... ப்
பாயலிற்கிடந்து பனிப்புறச்சுற்ற ... ... ஞ்
சேர்ந்துகலங்கச் சிவனுநீங் ... ... ... க
நோக்குறுமயலார் நொய்தினிலெய்தி ... ... த்
துள்ளித்திரிந்தவன் றுஞ்சினனென் ... ... றே
ஆசியம்புரிந்து பேசிடாதெளியே ... ... ன்
உய்வுறுமளவு முயர்ந்தோர்குழுவி ... ... ற்
குவியச்செய்துன் குரைகழல்வழுத்து ... ... ங்
தெருட்சியையுதவிச் சீர்பெறவளித்து ... ... க்
கடைதனிலென்னைக் காலனுக்குத ... ... வா
துன்பதகிழலி லுய்த்தருள்புரிவா ... ... ய்
வனசத்தடத்தின் மராளக்கணமெ ... ... ன்
பேடொடுமணந்து கூடுறும்பழனி ... ... க்
குன்றினினுளுங் குறக்கொ ... ... ... டி
யொன்றிடவளரு மொருகற்பக ... ... மே (௫௮)

## ஆசிரியவிருத்தம்.

கற்பகக்கொடியனையமட்வரல்களின்பமே கதியுதவுமென்னவெஃகு ... ங்
கசடாைப்பொருகொடியவசடனேனைப்பெரிய காமமதவாரியேனை ... ப்
புற்புதமெனச்சிதையுமாக்கைதனைநம்பிமிகு பொருணசையிலுழலும்விபல ப்
புகழேனைநற்குணஞ்சிறிதேனுமில்லாத புலைமைபெறுபொய்யனே னை
அற்புதநிறைந்தநின்னடியர்களையணுகாத வறிவிலாப்பேதையே ... னை
யன்புடன்மன்னித்துனருள்புரிகுவாய்கொலோ வறிகிலேனறிகிலே னே
விற்பனர்சொல்சற்சனர்செய்மெய்த்தவர்விசித்தியர்விராவுதென்பழனிமலைவாழ்
விளைகொள்சததளபாதமருவுசுபகுணாதீத மிளிர்குமரகுருநாத னே (௫௯)

## சந்தவிருத்தம்.

நாதக்கட்ன்முரசுறுதிறன்மதனெனை நாடிப்பகழியைவிடிலதையட்வொ ரு
போதப்படைதனையுதவிநல்வரமருள் போர்விற்குறமகளுறுபுனமதில்வெ கு
மோதத்தொடுதிரைமிகுமுதியவனென மோசத்துடனவடனைமருவுபுநி றை
கீதத்தொனிபெறுபழனியிலுறைதருகேள்விக்கணிமுடியெனவொளிர்புலவ னே
(௬௦)

## வெண்பா.

புலமையோரானுலும் பூதலத்தையாளு ... ... ந்
தலைமையோரானுலுந் தாரார்-சிலைமதவே ... ... ள்
என்னவெழில்வாய்ந்தாலு மெங்கள்பழனிக்குகனை ... ப்
பன்னிவணங்கார்வாழ்க்கை பா ... ... ... ழ் (சுக)

## கலித்துறை.

பாழாம்பிறவியை நீக்கிக்கதிதரு பாற்கரன்செ ... ... ங்
கேழார்வனசத் தடஞ்சூழ்பழனிக் கிரியில்வை ... ... க
ஏழாங்கடலைக் கடந்துங்குகைதனி லெய்தியுநீ ... ... ள்
வீழார்வனந்தொறுஞ் செல்லுவதேன்றவ மெய்யர்க ... ளே (சுஉ)

## நேரிசையகவல்.

மெய்யதையொறுத்து வையகம்வெறுத்து ... ... த்
தழைதருவனத்து மூழையினுழைந் ... ... தே
பொறிபுலனடக்கிச் செறிதருமிய ... ... ம
மாதியாயுறுச மாதியீறுக ... ... ப்
பயின்றுதவம்பல முயன்றுபுரிந்து ... ... ம்
நிலந்தனிற்சிறந்த தலந்தொறுமலைந்து ... ... ம்
ஆற்றிற்குடைந்து நீற்றைப்புனைந்து ... ... ம்
முண்டிதசிரமேற் கண்டிகைபூண்டு ... ... ங்
காரிக்துகிலைச் சீருறவணிந்துமி ... ... ந்
நோன்மையிற்றிகழு மேன்மையராயினு ... ... ம்
பொன்பொலிசுனைசூழ் தென்பழனியில்வா ... ழ்
மந்திரப்பொருளாஞ் சுந்தரக்குகன்று ... ... ட்
சிந்தனையிலையேற் பந்தமகன் ... ... று
தோன்றியபிறவி தொலைத்தெ ... ... ஞ்
ஞான்றுங்கதியை நணுகுதலரி ... ... தே (சுஙா)

## ஆசிரியவிருத்தம்.

தேசுடைப்பசுகவீடுமருவவேண்டிற் பெருந்தேவர்சவைபணியவேண்டி ற்
சிதைவுறக்கொடுமறலைவெல்லவேண்டிற்சிலைகொள்சித்தசனைமாய்க்கவேண்டில்
ஆசுநிறைபவவலைகடக்கவேண்டிற் புவியி லாக்கமதுபொலியவேண்டி ல்
அருமைதருகலைமுழுதுமறியவேண்டிற்புகலு மாயுண்மிகவளரவேண்டி ற்
பேசலுறுதவநெறிகள்பயிலவேண்டிற்பத்தி பெருகிமனமுருகவேண்டி ற்
பிணியொழிந்தொளிர்காயசித்திபெறவேண்டின்மதி பிறழாதிருக்கவேண்டி ல்
நேசமுடனெங்கள்பழனுபுரியில்வாழ்முருக நிமலனைக்குமரகுரு வை
நித்தமுநினைந்தவர்கள்பெற்றிடுவர்சங்கையற நிச்சயமிதென்றறிக வே (சுச)

## சந்தவிருத்தம்.

அறிவிலிலகு பொருளையரிய வணியையமல மணியி ... னை
அசரசரமு நிறையுமுயிரா யளவில்பெரிய வெளியி ... னை
மறையின்முடிவி னடனமதுசெய் மதியையமரர் பதியி ... னை
மகிழுமுனிவ ரிதயமலரின் மதுரமுதவு மதுவி ... னை

உறையுமுமல விருள்களிரிய வுதயவொளிசெய் கதிரி ... னே
உததிநிகரு மெனதுபிறவி யொழியவருளு மொழிய ... னே
இறைகொள்விபுதர் துதிசெய்பழனி யிலகுமலகில் புலவ ... னே
இனிதுபரவு மடியர்வினைக ளிடையமகிமை யடைவ ... ளே (௬௫)

வெண்பா.

அடைக்கலமாயுன்னை யடுத்தவர்கட் கெல்லா ... ... ம்
படைக்கரியவின்பம் பணித்துக்-கடைக்குத ... ... வா
நாயேன்றனக்குமட்டு நல்காவிடிற்பழனி ... ... ச்
சேயேநின்சீர்க்கழகோ செப் ... ... பு (௬௬)

கலித்துறை.

செப்பருநின்மலர்த் தாளிணைதன்னிற் றினம்பணிந்தே ... ன்
இப்பொழுதென்றனைக் கைவிடிலுன்றனக் கியாருரைப்பா ர்
ஒப்புடன்சேய்தனைக் காப்பதற்கன்னைக் குரைப்பதுண் ... டோ
எப்புவனங்களும் போற்றும்பழனி யிறையவ ... னே (௬௭)

இணைக்குறளாசிரியப்பா.

இறையரிமகபதி யீண்டித்தொழுநி ... ... ன்
மறைகமழ்கழலை வழுத்திடுதமியே ... ... ன்
மீதருளில்லா தேததுசொல்வா ... ... ய்
மனக்கனிவிலையோ நினக்கிதுமலை ... ... யோ
தஞ்சமென்றேனை யஞ்சலென்றுள்வா ... ... ய்
அபயநிறைந்திடுமேகமே விபவநிறைந்தப்ரவாக ... மே
நேயர்தமக்குறுசோலையே தீயர்தமக்கொருபாலை ... யே
புள்ளிச்சிகாவளவாகன வள்ளிக்கவாவுறுமோக ... ன
தண்ணளிபண்கொடுபாடிய வண்மலர்நந்தனநீடி ... ய
பொன்னரும்பழனிப் பொருகுட்டினி ... ... ற்
றன்னிகரின்றிவாழ் சரவணபவ ... ... னே (௬௮)

ஆசிரியவிருத்தம்.

பவளுபமுற்றதொரு குணபாசிவெஞ்சிறை படுத்தவதைமீட்டிமேற ... ன்
பகரரியகவிவலற் கருளவிலையோகொடிய பாலையிற்பாடல்பெற்று ... த்
தவமேவுபொய்யாமொழிக்கருளவில்லையோ தகைமருவுமருணகிரித ... ன்
றமிழ்மாலைசூடிமெய்க்கதியுதவவில்லையோ சற்குமரகுருமுனிவர ... ன்
நவமாகவெக்கலையு மோதாதுணர்ந்திட நபத்தவருள்புரியவிலை ... யோ
நாயேன்முனஞ்சலெனவந்தருள்செய்தோர்மொழியைநவில்வதுமுனக்கருமை
சிவமாம்பயோததியி லுற்றமுழுமதியமே திசழ்தவர்கள்பெறுநிதியமே. [யோ
செறியொளிகொளிரவிவலம் வருபழனிமலையின்மிசை தினமுலவிவளர்கு
[வனே (௬௯)

சந்தவிருத்தம்.

குரவின்மணமுங்குறமின்முலையிலணியும்புழுகு குலவுமணமுங்கமழ்பு யா
வரமுதவியென்கொடியவினையிகல்கடிந்ததிக வளமைதருமின்புதவுவா ய்
அரவணைதுயின்றவனுமுலகமதுதந்தவனு மமரர்கணமும்பணிய வே
திரமருவுதென்பழனிவரையின்மிசையன்பருயர்திரள்பரவவுந்தவிறையே (௭௰)

## வெண்பா.

வந்தித்துச்செந்தமிழால் வாழ்த்திக்கனிந்துருகி ... ... ப்
புந்திக்குளுன்றுளைப் போற்றிநிதனு-சிந்திக் ... ... க
வைப்பாயவேறேயோர் மனக்கவலையைப்பழ ... ... னி
யப்பாவையேலீ த ... ... ... ... ழி (எக)

## கலித்துறை.

அறிவேயுருவெனக் கொண்டவனேயறி யாதகொச்சை ... ச்
சிறியேனின்கையடை கண்டாயடிக்கடி செப்புவதே ... ன்
பொறியாருமஞ்ஞையுங் கிள்ளையுமன்றிலும் பூங்குயிலு ... ம்
நெறியோடியங்கும் பொழில்சூழ்பழனியி னின்றவ ... னே (எஉ)

## நிலைமண்டிலவாசிரியப்பா.

நின்றவிவ்வுலக நிகருங்கனவை ... ... யே
குன்றனவாக்கங் குளிரலைமானு ... ... மே
ஆக்கையுநீர்மே லக்கரமொக்கு ... ... மே
ஊக்கமார்விளரி யுறமுங்கொப்பு ... ... ளே
என்றறிவாள ரியம்பினரொன ... ... வே
இன்றுனையடைந்தே னிந்தருள்சுக ... ... மே
சீலருளத்திற் றிகழ்தருசுட ... ... ரே
கோலவருட்குக் குறைவிலாப்பெருக் ... ... கே
பன்மறைபோற்றும் பராபரப்பொரு ... ... ளே
சின்மயமாகச் செறிபரஞ்சோதி ... ... யே
சராசரமனைத்துந் தயங்கியவொளி ... ... யே
நிராமயவெளியே நிறைதருகாட்சி ... ... யே
தத்துவாதீதத் தனிப்பெருமுத ... ... லே
முத்தியையுதவ மூலத்தகாரண ... ... மே
சத்துவமலிந்த சகசநிட்கள ... ... மே
பத்தியில்விளங்கும் பரிபூரண ... ... மே
உருவிலாதாயு முருக்கொளற்புத ... ... மே
பொருவறுஞானப் புனிதவாரிதி ... ... யே
அழலெனும்பிறவி யகற்றிடுமதி ... ... யே
பழனிமாமலைமேற் பரவியகதி ... ... ரே (எஙூ)

## ஆசிரியவிருத்தம்.

கதித்திட்டவிம்மையிற்குறைவற்றபோகமுங் காமனைப்பொருவுமெழிலு ... ங்
கவினுற்றமறுமையின்மலர்க்காமவல்லிபடர் கற்பகத்துறைபோகமு ... ந்
துதித்திட்டநின்னையான்வேண்டிலேனின்னரிய துணைமலர்க்கழல்வேண்டினேன்
தோன்றுமிருபோகமுஞ்செம்பொன்கரும்பொன் றுலங்கியவிலங்காகுமா ல்
மதித்திட்டமுளவடியனைப்போலிருக்கவென் மனப்படிகொடுத்தருளுவா... ய்
வண்ணஞ்செறிந்துகமழ்தண்ணந்துழாய்மவுலி மருகனேதிருமுருக ... னே
பதித்திட்டநவமணிச் சிகரியம்பழனிவளர் பார்த்திபாகார்த்திகே ... யா
பலகலையுமுணர்புலவ கயிலையரன்மகிழ்குரவ பரகதியையருளிறைவனே (எச)

## சந்தவிருத்தம்.

அருளுக்கொருகடலெனநிறைதருமெழி லருமைச்சரவணபவகுருபரகு ... க
மருள்விட்டடியனுநினதிணையடிதொழு மதிபெற்றதிசுகமதிலிலகிடவரு ... ள்
தெருளுற்றவர்பணிசுபகரயுகபத திகழ்சட்குணசசிதரசுதஜெயபத ... ர
சுருள்புட்கரமுகையலர்தருபணைசெறி சுகிர்தப்பழனியின்வரையுறைபரம னே
(எரு)

## வெண்பா.

பரமபரமாகிப் பகருதற்குமெட்டா ... ... த்
திரமருவுதென்பழனித் தேவே-வரமுத ... ... வி
நாயேனைமீட்டுனது நற்றுடொழவருள்செ ... ய்
வாயேயெஞ்ஞானறு மகிழ்ந் ... ... து (எசு)

## கலித்துறை.

துருவியழைக்கின்ற கன்றுக்கிரங்குஞ் சுரபியைப்போ ... ன்
மருவியெனைத்தொடர் பையுளைநீக்கிவந் தாண்டுகொள்வா ய்
திருவிலுயர்ந்த வரம்பையர்நாட்டியஞ் செய்திடவை ... ங்
கருவிமுழங்கிடு தென்பழனுபுரிக் காவல ... ... னே (எள)

## நேரிசையகவல்.

வலன்றருதனுவொடும் வதிகரணத்தொடு ... ... ம்
புணர்ந்திடுபோக புவனந்தமை ... ... யே
துனிமிகுமாயையிற் றோன்றச்செய்த ... ... து
நீயேயவையு நினதாயிருப் ... ... ப
யானெனதென்னு மெண்ணறுமயக்கி ... ... ற்
செறிந்துமதர்த்துத் திரிந்தயர்கின் ... ... ற
உணர்வறுசிறியே னுய்குவதெங்ங ... ... ன்
றிகழ்தரவெனக்குத் தெரிவித்தருள்வா ... ... ய்
தாராரிதழிச் சடையார்க்கன்பாய் ... ... ப்
போதித்தருண்மெய்ப் புனிதக்குர ... ... வா
பனைகரவணையிற் பயின்றிடுசிறு ... ... வா
நறைக்குழல்வள்ளி நாயகிகிழ ... ... வா
கைம்மாக்கலுழ்மதங் கமழ்வெறியகற்றி ... ... க்
காசறைநானங் கம்மெனமணக்கு ... ... ம்
பழனியங்கிரிமேற் பண்ணவ ... ... ர்
குழனிகள்கொண்டு துதிக்கவாழ்பவ ... ... னே (எஅ)

## ஆசிரியவிருத்தம்.

பவமலைகடந்ததனிவாமனமுனிக்குப் பகர்ந்தமெய்ப்பொருளின்மணமு ... ம்
பனிமலைமடந்தையிணைமுலையுண்டகுங்குமப் பரிமளமும்வீசும்வா .. யா
துவரிதழ்க்குறவள்ளிபிடிகுயத்தணிகின்ற துகளற்றசலவைமணமு ... ஞ்
சுமனசவரத்தநறவுந்தமிழ்ப்படலைச் சுகந்தமுங்கமழ்தருபு ... யா
உவமையறுசதுமறைபின்மோதமுடனடியார்க ளுள்ளமுமணக்குமுன்ற ... ன்
ஒண்கழலிணைப்போதெனுச்சியின்மணந்திட வுவந்தருள்புரிந்தாளுவா ... ய்
தவவல்வர்புவிவலவர்கவிவலவர்மதிவலவர் சார்ந்திடும்பழனிமலைமே ... ற்
றயங்கிபவயம்பெறுசயந்திகழ்சுயம்புவே சச்சிதாநந்தகுரு ... வே (எகூ)

## சந்தவிருத்தம்.

நந்தாவருட்சுகநிறைந்தேமகிழ்ச்சிபெற நண்பாகவற்புதவரந்தாவருப்பமு கு
கொந்தார்குழற்கவுரிமைந்தா குறச்சிறுமி கொண்காதவப்புனிதர் கொண்டாடி
[மெய்த்துதிசெய்
கந்தாமிருத்தஜெயகுந்தாநபச்சுர ருகந்தேதொழச்சிகியுவந்தேறிவெற்றியொ டு
தந்தாதனத்தனனவென்றேநடிக்கமருதஞ்சூழ்திருப்பழனிவந்தேதழைத்தவனே
(அ௰)

## வெண்பா.

தழைக்குந்தயாநிதியே தஞ்சமென்றேற்கின்ப ... ... ஞ்
செழிக்கும்படிகருணை செய்து-பிழைக்கும்வ ... ... கை
போதித்தருள்புரிவாய் பூம்பொழில்சூழ்தென்பழ ... னி
யாதித்தனேயிங் கமர்ந் ... ... து (அக)

## கலித்துறை.

துய்க்கும்விடையத்தி லுய்க்கும்புலன்கொடு சோகமுற்றி ப்
பொய்க்கும்புவிதனி லெய்க்குமெனக்கருள் பூட்டுவை ... யோ
கைக்குங்கடுவொடு பைக்கும்பணியினைக் காதுமயி ... ன்
மொய்க்குந்திருப்பழ னிக்கண்மகிழ்ந்துறை முன்னவ ... னே (அ௨)

## நிலைமண்டிலவாசிரியப்பா.

முன்னருநினது மொய்கழலிணைமலர் ... ... ப்
பொன்னடிபூசியாப் பொய்யனுயினு ... ... ம்
அன்போரணுவு மகந்தனிலில் ... ... லா
வன்பார்விபல மடமையனுயினு ... ... ம்
நனிநிலம்புகழ நடித்துனையென்று ... ... ங்
கனவினுநினையாக் கள்வனுயினு ... ... ந்
தஞ்சமென்றேனைத் தயைபுரிந்தினிதா ... ... ய்
அஞ்சேலெனிலு னரும்புகழ்கெடு ... ... மோ
அருட்கொடைபடைத்த வாண்டகையென்ன ... த்
தெருட்சியர்நின்னைச் செப்புதல்படி ... ... றே
இரவாமுன்ன ரீவதுவள்ள ... ... ற்
குரியதாவிருப்ப வுந்தனையடியே ... ... ன்
வேண்டியுங்காவா விடினின்சீர்த்தி ... ... க்
கியாண்டுங்குறைவென் றறிகிலைகொல் ... ... லோ
விருப்பொடுநின்னை வேண்டியதந் ... ... தை
பருப்பதந்தனுசாப் படைத்ததனுலு ... ... ந்
தகவுடனின்னைத் தாங்கியவன் ... ... னை
நகமகளாக நணுகியதாலு ... ... ம்
மிளிர்தருநின்னை விழைந்துளதார ... ... ம்
புளினர்தம்மகளாய்ப் பொலிந்ததனுலு ... ... ந்
துன்றியதிறலொடு தொல்சீர்பெறு ... ... நீ
குன்றுதோறுடிக் குலவியதாலு ... ... ம்
உள்ளமுமங்ஙனே யுற்றதோவறியே ... ... ன்
கள்ளவிழ்ந்தொழுகுங் கடிமலர்நீ ... ... பா

குருமணிக்கமுகின் குலைக்காய்சிதறி ... ... ட
மருவளர்வார்வயல் வாளைகள்பாயு ... ... ம்
வளம்பெறுபழனி மாமலைமீ ... ... து
விளங்குகூரயில்கொடு மேவுசேவக ... ... னே (அரு)

## ஆசிரியவிருத்தம்.

சேவலுயர்கொடிகொண்டகாவலாநின்னிடஞ் சிறியேனுறுங்கவலையை... ச்
செப்பியும்பன்முறைவழுத்தியுங்கருணையொடு சிறிதுமனதுருகாததா ல்
ஆவலறவேபராமுகமுடனிருப்பமெனி லந்தோபிறப்புவருமெ ... ன்
றகமதுபனிக்கின்றதேயென்செய்வேனிதற் கையனேநின்னையல்லா... ற்
பாவனம்புரியவொருகதிவேறுகாண்கிலேன் பத்தரட்சணசித்த ... னே
பரமசுகநித்தனேவரமருளுமுத்தனே பண்ணவர்கள்பணியத்த ... னே
காவணமெனக்கந்தரக்குழுநிறைந்துதவழ் கானகஞ்சூழவோங்கு ... ங்
கனகவரைநிகர்பழனிமலையின்மிசைநிலவிவளர் கந்தனேகாங்கேயனே (அச)

## சந்தவிருத்தம்.

கேயூரப்புயநித்தன்மலர்க்கர மீதாரக்கனியைக்கொள்விருப்பொ ... டு
கேழார்பொற்பதமுற்றமணிக்கழ லொலிமீ ... ... ற
மாயூரத்தையுகைத்துநொடிப்பொழு தேவேகத்துடன்முப்புவனத்தையும்
வாகாயற்பொடுசுற்றியமெய்த்திறல் பெறுவீ ... ... ரா
நாயேனைத்தொடர்துக்கமகற்றிட வாராயற்புதசிற்பரசற்கு ... ரு
நாதாவுத்தமஷட்குணலட்சண முடையோ ... ... னே
தேயாநற்சசியொப்பவுகத்தினு மாயாநற்பழனிப்பதியிற்பொ ... லி
தேவாசத்திகரத்திலெடுத்தருள் பெருமா ... ... ளே (அரு)

## வெண்பா.

பெருந்துயரநீங்கிப் பெருக்கமொடுநெஞ் ... ... சே
தருஞ்சுகமெந்நாளுந் தழைக்குங்-கரும்படரு ... ம்
பண்ணைசெறிதென்பழனிப் பண்ணவன்றன்றாண்மலரை
எண்ணிநிதமுந்துதித்தா யே ... ... ... ல் (அசு)

## கலித்துறை.

ஏலத்திற்றோய்ந்த குழலியர்காதலை யெண்ணிநெஞ் சே
காலத்தைவீணிற் கழித்தனையேயென்ன கண்டனை நீ
தாலத்திற்பேர்பெறு தென்பழனாபுரிச் சண்முகன்று ட்
கோலத்தைக்காணுதி சேர்வாய்சுகத்தைக் குறையற வே (அஎ)

## நேரிசையகவல்.

குறையகல்வுறயான் குயின்றிடுமொழியை ... ப்
பொறைதனிற்குவிந்து போதத்திலலர்ந்து ... ன்
செவிமடுத்தினிதாச் சென்றுநம்பதியு ... ... ம்
யுவதியரிருவ ருறுபுடையவனு ... ... ம்
வேலைப்புயத்தில் வேய்ந்திடுவலனு ... ... ங்
கோலக்கலபக் குரகதத்தவனு ... ... ங்

குக்குடமுயர்த்த குளிர்கரத்தவனு ... ... ம்
இக்கணப்பழிக்கு மெழிலுடையவனு ... ... ம்
மறைச்சிலம்பலம்பு மலர்ப்பதத்தவனு ... ... ம்
இறைமுதற்கடவுள ரேத்திடுதேவு ... ... ம்
மணிதிகழ்பழனி மலைவாழ்பவனு ... ... ம்
அணிதருகமல மனையசண்முகனு ... ... ம்
வாகைகொள்பன்னிரு வாகுடையவனு... ... ம்
ஆகியசெல்வ னவன்பெயர்குமர ... ... ன்
இருந்திடுகொலுவி லெய்துபுநெஞ் ... ... சே
திருந்தியசமயந் தெரிந்துமெல்லென ... ... நீ
அழுதிடுகண்ணுந் தொழுதிடுகையுமாய் ... ப்
பழுதறநம்மிகை பணித்தியேனம ... ... து
துன்புகளனைத்துந் துடைத்தி ... ... ங்
கன்புடன்சுகத்தை யருள்புரிகுவ ... ... னே (அஅ)

## ஆசிரியவிருத்தம்.

குவவுமற்புயவீரவாகுவர்களாதியாக் குலவுபாரிடவாகினி ...க் [ம்
குழுவுடன்சென்றுதிதிமைந்தர்தமைமாய்த்தடற் கொக்கினைப்போழ்ந்துமேலா
உவகைபெறமகபதிக்கொளிர்முடியளித்துவிய னுலகினைக்குடியேற்றி ... யே
ஒண்புவியணங்கினுக்கணியெனுந்தென்பழனி யோங்கலிற்றேன்றிநந்த ... ங்
தவவடியர்தங்களைக்கைப்பிடித்திங்ஙனந் தருகுவேன்வீடிதனைநீ ... ... ர்
தடையறக்காணுதியொனும்பரிசுபோற்றனது தண்கையிற்றண்டுபற்றி ... ச்
சிவமெனவிளங்கிவளர்குகனையல்லானமது திவினைத்தொடர்பகற்றி ... ச்
செய்யசுகமினிதருளவேறுகதியின்றிது தெளிந்துதுதிபுரிதியக ... மே (அகூ)

## சந்தவிருத்தம்.

அகலியந்தனில்வாழ்குரங்கென் றங்குமிங்குந்திரிவுறுத ... தி
தகவுதங்குசிவாசலன்றன் றண்பெறுஞ்செஞ்சரணமேவு ... பு
புகரகன்றகமேபணிந்துன் புந்திகொண்டன்புருகிநீயுறி ... ல்
இகல்செயும்புவிமாயையின்றுன்பின்றி யின்பம்பெருகுவாயரோ (கூ0)

## வெண்பா.

வாயிலோரொன்பதா வல்லென்பேயுத்திரமா ... த்
தோயுமுனெய்யே சுவராக-வேயுமுட ... ... ன்
மெய்யென்றுவாளா மெலியாமற்றென்பழ ... னி
ஐயன்கழலைநெஞ்சே யண் ... ... ... டு (கூக)

## கலித்துறை.

அண்டரும்வேதனு நாரணனுங்குலி சாயுதங்கை ... க்
கொண்டவலாரியு மாதவத்தோருங் குழிஇயிருந்து ... ம்
பண்டைவெஞ்சூரனை வீட்டத்திறலும் படைத்தன ... ரோ
தண்டமிழ்சேர்பழ னுபுரிவேலன் றனையன்றி ... யே (கூஉ)

## நேரிசையகவல்.

அன்றடனிறைந்த குன்றதையெறிந்தா ... ... ன்
பராசரன்புதல்வர் துராவினையொழித்தா ... ... ன்
பாவலன்றனது காவலைச்சிதைத்தா ... ... ன்
சமயமிகழ்ந்தவெஞ் சமணரைவதைத்தா ... ... ன்
அகத்தியமுனிக்கு மகத்துவமளித்தா ... ... ன்
இன்னணமனேக ரிடும்பைகளகற்றி ... ... ப்
பன்னருஞ்சுசத்தைப் பாலித்தவனு ... ... ம்
பழனிவாழ்குகனம் பாலிருந்தடரு ... ... ம்
பழவினைத்தொடரைப் படுத்தான்கொல் ... ... லோ
மயக்கநினக்கேன் மன ... ... ... தே
வியப்புடனன்னேன் விரைக்கழல்வழுத் ... ... தே (கூங)

## ஆசிரியவிருத்தம்.

தேமலர்வனங்களடர்தென்பழனிமலைமீது திகழுமெய்க்குமரனிவரு ... ந்
தேசுடையவாசிநமதனுறொனும்பாந்தளைச் சிதைவுறவிழுங்குமவனே ... ண்
டோமறுபதாகைநம்பவவிருளிரிந்திடத் தொனிசெய்யுமவனுயுத ... ந் [ங்
துங்கமொடுகமதுபகையைத்துகளுறப்போழ்ந்து துணையெனப்புடையினிற்கு
காமர்செறியவன்வனசநயனங்கணம்மைநற் கருணையொடுநோக்குமவன்மா க்
கழலிணைநறும்போதுநம்பிறவிவெம்மையைய கற்றியளியாநிழற்று ... ம்
நேமமுறுமவன்மகாமந்திரம்போதத்தை நிறைவுறத்தருமாதலா ... ல்
நெஞ்சமேதஞ்சமவனன்றிவேறின்றென நினைந்துநியன்படைக ... வே (கூச)

## சந்தவிருத்தம்.

அடைக்கலமாசவடுக்கிலுன்மாயை யறுத்தநிபோதமளித்தருள்வா ன்
விடைக்கொடியோனுமலைக்கொடிமாதும் வியத்தருமானைமுகத்தனுநேர்
அடிக்கடிகூவிவியப்பொடுநீவி யணைத்தினிதாகநயப்புறுசே ... ய்
திடக்கவிவாணர்வழுத்திடுசீர்கொ டிருப்பழனுபுரியுற்றவ ... னே (கூடு)

## வெண்பா.

உற்றவன்னைதந்தைகுரு வோங்குதெய்வநின்னையல்லான்
மற்றொருவரின்றிம் மகிதலத்திற்-சுற்றவர்க ... ள்
ஏத்துகின்றதென்பழனி யெந்தலோய் நாயேனை ... க்
காத்தருள்வதுன்றன் கட ... ... ன் (கூசா)

## கலித்துறை.

கட்டற்றிரைபோன்று வருமிகைசார்ந்து கலக்கமுற்... ... ற
மடக்குணனுமென் மருணீக்கியுன்றன் மலர்ப்பதமே ... ன்
முடிக்கணியாக விருத்திமெய்ப்போத மொழிந்தருள்வா ... ய்
மடைக்களிபாயும் வயல்சூழ்பழனி மலைக்கர ... சே (கூஎ)

## நிலைமண்டிலவாசிரியப்பா.

அரனுமையிருவரு மன்புறவழைத்து ... ... க்
கரமதிலெடுக்குங் கனியேவரு ... ... க
இந்திரன்முதலா மிலேகர்தம்முடிமே ... ... ற்
சந்ததமணக்குந் தாரோவரு ... ... க
புகரறுதொண்டராம் புட்குலங்களிக்க ... ... த்
தகவொடுநிழற்றுந் தருவேவரு ... ... க
மிகைத்துயரென்னும் விடங்கெடத்தமியே ... ன்
அகத்துளினிக்கு மமிர்தேவரு ... ... க
சதிமலத்திமிரந் தணந்திடநிலவி ... ... க்
கதிதனைக்காட்டுங் கதிரோவரு ... ... க
களிப்புறவிறைக்குக் கலைமறைப்பொருளை ... க்
கிளத்திடுஞானக் கிளியேவரு ... ... க
உரமிகு மையலிலுய்த்திடுசனன ... ... ப்
பரவையைக்கடத்தும் பஃறியேவரு ... ... க
திறம்பெறுதத்துவத் திண்கணைகடந் ... ... து
பிறங்கியகருணைப் பெருக்கேவரு ... ... க
புலன்பொறிகரணம் போக்கியீண்டி னி ... ... ய
நலன்றருகருணை ரசமேவரு ... ... க
தவத்தொடுநின்பொற் சரண்புகுமடியா ... ... ர்
பவப்பிணியகற்றும் பண்டிதாவரு ... ... க
பொங்குறுமாயையைப் போழ்ந்தொளிர்சத்தியை ... ச்
செங்கையிலெடுக்குஞ் சேவகாவரு ... ... க
அலைவறுதவத்தோ ரகவிழிவிளங் ... ... க
மலிவிந்தெனுமயில் வாகனவரு ... ... க
சுரும்பினமுரலிசை துதைகுபுநறவ ... ... ம்
அரும்பியகதம்ப வாராவரு ... ... க
விருப்பொடுகுறமின் மேவப்பொன்ன ... ... ம்
பொருப்பெனநிவந்த புயனேவருக ... ... க
மிதந்தவிரின்பார் விடருள்வேத ... ... ச்
சதங்கையொலிக்குஞ் சரணவரு ... ... க
அடியேன்றன்னை யாதரித்தருள ... ... க்
கடியார்பழனிக் கற்பகம்வருக ... ... வே (கூஅ)

## ஆசிரியவிருத்தம்.

கற்பகப்பதிவாசவன்மகன்கனவினிற் காட்டியருள்செய்தநினதொ ... ண்
கஞ்சமலரெனவலரும்வதனத்தைநாயினேன் காண்டிடக்காட்டியேனு ம்
அற்புதக்கருணைபொழிமலர்விழிகள்பனிரண்டி லன்புகூர்ந்தொன்றிலேனும் [ன்
அணைவிழியிலேனுமோர்கடைவிழியிலேனுமெனை யருள்பெருகநோக்கியென்ற
உற்பவமொழித்தினியமெய்ச்சுகமளித்தருள்செய் ஓங்குமரகுருநாத ... னே
உணரரியதேஜோமயாநந்தரூபனே யுசிதநயகுணதீப ... னே
மற்குலவுபச்சையிவுளித்தபனனுக்குநளிர் வளியிளம்பாளையுத ... வி
மதர்செய்தெங்குங்கமுகுமருவிடுந்தென்பழனிமலைவிளங்கும்பரமனே (கூசு)

### சந்தவிருத்தம்.

பரமகுரவாநமோசரவணபவாநமோ பதுமசரணுநமோவெனவோ தி
யிரவுபகலாகநீடுதிபுரியுநாயினே னினியசுகமேவநீயருள்வா யே [னோர்
குரவுகமழ்வாகனேயருணிறைவைபோகனே குறவனிதைமோகனேயெனவர
பரவமயிலேறியேகுலவியழகாகவே பழனிமலைமீதுவாழ்புகழோ னே (ҧ)

---

### வாழி—வெண்பா.

திருப்பழனிவாழுந் திருமுருகன்வா ... ... ழி
மருக்குழல்சேர்தேவியர்கள் வாழி-செருக்கியவே ... ல்
வாழிமயில்வாழிகொடி வாழிதமிழ்வாழியற ... ம்
வாழிபுவிவாழி மகிழ்ந் ... ... து (ҧக)

பாயிரத்திற்பாடல்கள் ச

ஆக ... ҧரு

அலங்காரபஞ்சகமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

---

### வெண்பா.

அலங்காரமார்பழனி யாண்டவன்பொன்வாகு ... க்
கலங்காரபஞ்சகத்தை யன்பாய்த்-துலங்குக ... வி
கூர்ந்தணிந்த.னன்குகன்சீர் கூறுமடி யாரடியை ... ச்
சார்ந்தசுந்தரக்கவிரா ச ...ன்